www.tamilarangam.net

## மட்டக்களப்பு தமிழரின் இருண்ட எதிர்காலம்

*எழுவான்கரையான்*

கருணா விவகாரம் ஆரம்பித்து பல மாதங்கள் ஓடிவிட்டன.புலிகள் கருணாஅணியினரை போரில் தோறக்கடித்தபின்னர்,எல்லாம் வழமைக்குதிரும்பிவிடும் என புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் எதிர்பார்த்தது போல் எதுவும் நடக்கவில்லை.மாறாக இருதாப்பினரும் சகோதரப்படுகொலைகளில் இறங்கியுள்ளனர். இதனால் மட்டக்களப்பில் பதட்டநிலைமை நீடிக்கின்றது.

### மடடக்களப்பின் தற்போதைய நிலைமை

கருணாவிவகாரம் வெடிப்பதற்கு முன்,மட்டக்களப்பில் புலிகளிடம் சுமார் 6000க்கு மேற்பட்ட நன்கு பயிற்சி பெற்ற போராளிகள் இருந்தனர் என்பதை பல தகவல்களும் உறுதிப்படுத்துகின்றன. அவர்களிடம் ஏராளமான சுடுகலன்களும் வெடிப்பொருட்களும்,நீண்டதூரம் தாக்கும் எறிகணைகளும் இருந்தன. ஆயதங்களைச் சேர்ப்பதில் எப்போதுமே குறியாக இருந்த தளபதி கருணா மட்டக்களப்பிற்கென பல நீண்டதூரம் தாக்கும் எறிகணைகளைப் பெற்றிருந்தார் எனக்கூறப்படுகிறது. புலிகள் தந்திரமாக நடத்திய முதல்தாக்குதலின் போதே தான்வெல்ல முடியாது எனக்கண்டதுடன், அநியாயமாக மட்டக்களப்பின் இளம் வீரர்களைப் பலி கொடுத்தார் என்ற பழிக்கு அஞ்சிய கருணா போரை நிறுத்திக்கொண்டார். போர் அணிகளைக் கலைத்து,போராளிகளை தமது வீடுகளுக்கு செல்லுமாறு பணித்தார். இதில் ஆக சுமார் 2000 போராளிகள் மட்டுமே தமது இல்லங்களுக்கு திரும்பிச்சென்றதாகக் கூறப்படுகிறது. ஏனையோரில் அனேகமானோர் நாட்டில் இருக்க அஞ்சி,மக்கிய கிழக்கு நாடுகளில் வேலை தேடும் பொருட்டு,கொழும்புப்பகுதிக்கு தனியாகவும், பெற்றோர் உறவினருடன் சென்றதாகவும் நம்பப்படுகின்றது. இவர்களைத் தவிர எஞ்சியவர்களில் சிலர் மீண்டும் வன்னிப்புலிகளிடம் சென்றிட, சிலர் கருணா அணியினராக மட்டக்களப்பின் சில காட்டுப்பகுதிகளில் தங்கிவிட்டதாகக் கூறப்படுகிறது. கருணா மட்டக்களப்பில் இருந்த நீண்டதூரம் தாக்கும் எறிகணைகளை அழித்தும் செயலிழக்கச்செய்தும் விட்டார் என்றும்,ஏனைய ஆயதங்களை பல இடங்களில் மறைத்துவிட்டுச்சென்றார் என்றும் சொல்லப்படுகிறது. இதன்மூலம் தானேகட்டிவளர்த்த ஆயத வளங்களையும் மனித வளங்களையும் வன்னிப்புலிகளின் கைகட்கு செல்வதை கருணா வெற்றிகரமாகத்தடுத்து விட்டார். புலிகளின் தலைமைக்கு பெருமளவு போராளிகளை, அதுவும் திறமைமிக்கபோராளிகளை மட்டக்களப்பே வழங்கி வந்திருந்தது. கருணாவினால் ஏற்பட்ட இரப்பு புலிகளின் சரித்திரத்தில் ஏற்பட்ட மிகப்பெரும் இழப்பு என்பதில் சந்தேகம் இல்லை.



இன்று மட்டக்களப்புப் பகுதியில் உள்ள வன்னிப்புலிகளின் எண்ணிக்கை ஆக 300 என்றே கருணா, லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் தமிழ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திற்கு கூறியிருக்கிறார்.எனக்கு கிடைத்த தகவல்கள் கருணா கூறிய இத்தொகை சரியானதே என்பதை உறுதிப்படுத்துகின்றன. வன்னிப்புலிகள் தமது கட்டுப்பாட்டுப்பகுதிகளில் கூட வெளிப்படையாக நடமாடுவதில்லை. கொக்கட்டிச்சோலையில் உள்ள அவர்களின் பிரதான அலுவலகத்தில் ஒருசிலரே இருப்பதாகவும்,அவர்களும் அடிமட்ட நிலையில் உள்ளவர்களே என்றும் கூறப்படுகிறது. வுன்னிப்புலிகளின் முக்கியமான மட்டக்களப்புத் தலைவர்களை இந்நாட்களில் வெளியில் காணமுடிவதில்லை என்றும், இவர்கள் இடம்மாறித்திரிவதாகவும் கூறப்படுகிறது.அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள எழுவான்கரைப்பகுதிகட்கு வன்னிப்புலிகள் இரகசியமாகவே வந்துசெல்கின்றனர் எனவும், அவர்களின் அரசியல் அலுவலகங்கள் பலவும் மூடிக்கிடக்கின்றன எனவும் மட்டக்களப்பு வட்டாரங்களின் மூலம் தெரிய வருகின்றது. இருதரப்பைச்சேர்ந்தவர்களும் கொல்லப்படுவதாக வரும் செய்திகள், அரச கட்டுப்பாட்டுப்பகுதிகளில் நடைபெறும் கொலைகள் பற்றியனவாகும். புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த படுவான்கரைப்பகுதியிலும்,ஏனைய மட்டக்களப்புக் காட்டுப்பகுதிகளிலும் நடைபெறும் செய்திகள் வெளியாவதில்லை. காட்டுப்பகுதிகட்கு செல்லும் ஊர்மக்கள், இக்காட்டுப்பகுதிகளில் சடலங்களையும், மண்டைகளையும் அடிக்கடி காண்பதாக தெரிவித்திருக்கின்றனர். குடும்பிமலைப்பகுதியை தமத பிரதான மறைவிடமாகக் கொண்டு இயங்கும் எஞ்சியுள்ள கருணா அணியினர், வன்னி அணியினைச் சேர்ந்தவர்களுடன் சந்தித்த இடங்களில் மோதுவதாகவும், இருதரப்பினரும் பரஸ்பர கொலைகளில் ஈடுபடுவதாகவும் மட்டக்களப்புவட்டாரங்கள் கூறுகின்றன. புலிகளின் வரிசேகரிப்புநடவடிக்கைகள் மட்டக்களப்பில் முற்றாகவே நின்றுவிட்டன. புல விவசாயிகளின் காணிகளைப்பறித்து புலிகள் தாங்களே செய்கை மேற்கொண்டிருந்தனர். அக்காணிகள் அனைத்தும் புலிகளால் கைவிடப்பட, அவற்றிற்கு சொந்தமான விவசாயிகள் அவற்றை மீளப்பெற்றுள்ளனர். இவையே மட்டக்களப்புத் தமிழரைப்பொறுத்த அளவில், கருணா விவகாரத்தால் ஏற்பட்ட ஒரே நன்மை. வுன்னிப்புலிகள் மீண்டும் தமக்கென இளஞ்சிறார்களை வலுக்கட்டாயமாக தமது படையில் சேர்ப்பதாக செய்திகள் வந்த போதும்,அவர்கள் தற்போது இருக்கும் நிலையில், பெருமளவில் ஆட்களைத்திரட்டமுடியாத நிலைமையே நிலவுவதாகக் கூறப்படுகிறது. இதேவேளை வன்னிப்புலிகளின் தலைமை,கருணாவை தனிமைப்படுத்தும் திட்டம் ஒன்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது. கொழும்பு புறநகர்ப்பகுதியான கொட்டாவ என்னும் இடத்தில் சிலவாரங்களுக்கு முன்னர் வன்னிப்புலிகள் நடத்திய படுகொலைகள் இதற்கு உதாரணமாகும். இந்தப் படுகொலைகளின்போது 7 மட்டக்களப்புத் தமிழ் இளைஞர்கள் நித்திரையின் போது கோரமாகக் கொல்லப்பட்டனர். அப்படி கொல்லப்பட்டவர்களில் ஒருவரான கருணாவின் பிரதான மெய்க்காப்பாளராக இருந்த காஸ்ட்ரோவின் கதை புலிகள் இயக்கத்தில் சேரும் இளஞ்சிறார்களின் நம்பிக்கை அற்ற இருண்ட எதிர்காலத்திற்கு நல்ல உதாரணமாகும்.



### காஸ்ட்ரோவின் கதை

எழுவான்கரைப்பகுதியான நொச்சிமுனைக் கிராமத்தில் சற்று வசதியான குடும்பத்தில் பிறந்தவனே ‘காஸ்ட்ரோ‘ என புலிகளால் பெயர் சூட்டப்பெற்ற கந்தையா ஆனந்த குமார். தந்தை கிராம சேவகர் தாய் ஆசிரியை. படிப்பைக் கெடுத்துக் கொண்டு தனது 15வது வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தான். பிறக்கும்போதே அவன் இதயம் பலவீனப்பட்டவனாக இருந்தான் தொழில்நுட்பம் சார்அறிவு நிறையவே அவனுக்கு இருந்தது. இதனால் கருணா, காஸ்ட்ரோவை தனது மெய்க்காவலர் அணியில் சேர்த்துக்கொண்டு, தொலைதொடர்பு சாதனங்கட்கு பொறுப்பாக நியமித்திருந்தார். 1989-90 பகுதிகளில், புலிகளின் மட்டக்களப்புத்தலைமையுடன் நான் நெருங்கிய தொடர்பைக்கொண்டிருந்த காலத்தில் புலிகளின் கஞ்சிக்குடிச்சாறு பகுதிக்கு கருணாவை சந்திக்க சென்றிருந்த வேளை, எனது

www.tamilarangam.net

உறவுக்காரனான காஸ்ட்ரோவை சுட்டிக்காட்டி மிகத்திறமையான தொழில்நுட்பப்புத்தியுடையவன் எனக் கருணா என்னிடம் கூறியிருந்தார். 15 வருடங்களுக்கு மேலாக புலிப்போராளியாக இருந்த காஸ்ட்ரோ கருணாவின் மெய்ப்பாதுகாவலனாக இருந்து,கருணாமுன்னின்று நடத்திய பல படைநடவடிக்கைகளில் பங்குபற்றியவன். கருணாவிவகாரம் வெடித்து, பின் கருணாதனது படைகளைக் கலைத்தபின்னர் இவன் வெளிநாடுசெல்லும் நோக்கில் கொழும்பு சென்று தங்கியிருந்தான். இவனுக்கான தங்குமிட வசதிகளை கருணாவே செய்து தந்திருக்க வேண்டும். கொழும்பு சென்றது முதல் என்னுடன் அடிக்கடி தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டிருந்தான்.அவன் அவுஸ்த்திரேலியா வந்துவிடவே விரும்பினான்.இதனால் முதலில் மத்திய கிழக்கிற்கு செல்லும் வாய்ப்பு ஏற்பட்ட போதும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவுஸ்த்திரேலியா வருவது சாத்தியமில்லை எனக்கண்டவுடன்,மத்திய கிழக்கிற்கு செல்லும் முயற்சியை மீண்டும் ஆரம்பித்து, கொலைசெய்யப்படுவதற்கு சில நாட்களுக்குமுன்னர் கூட துபாய்க்கு வேலைக்குச்செல்லவென நேர்முகப்பரீட்சை ஒன்றிற்கும் சென்றிருந்தான். கொல்லப்படுவதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னர் என்னுடன் கதைத்தபோது கருணா அம்மான் கட்சி ஆரம்பிக்கப்போவதாகவும், தன்னுடன் வந்து மீண்டும் சேரும்படி கருணாஅம்மான் தொலைபேசியில் கேட்டதாகவும், தான்வெளிநாடுசெல்ல விரும்புவதாகக்கூறி கருணாஅம்மானின் அந்த அழைப்பைத் தான் ஏற்க மறுத்துவிட்டதாகவும் காஸ்ட்ரோ என்னிடம் கூறியிருந்தான். காஸ்ட்ரோ கொழும்பு சென்ற பின்னர் மட்டக்களப்பு திரும்பவில்லை. தனது கல்வித்தராதர பத்திரங்களை தனது உறவினரை கொழும்புக்கு கொண்டுவந்து தருமாறு கேட்டுப்பெற்றிருந்தான். முருணாவின் மெய்க்காவலனாக கருணாவுடன் புலிகளின் ஐரோப்பிய நகர்பேச்சுகளில் கலந்துகொள்ளச் சென்றிருந்ததால், காஸ்ட்ரோவிடம் இலங்கைஅரசின் சகல நாடுகளுக்கும் செல்லக்கூடிய கடவுசீட்டுஇருந்தது. காஸ்ட்ரோ இருஅணியினருக்கும் இடையிலான சகோதரப்படுகொலைகளில் கலந்துகொள்ளவில்லை. அத்தகைய விருப்பும் கொண்டிருக்கவில்லை. வன்னிப்புலிகளின் மட்டக்களப்புத் அரசியற்பிரிவுத் தலைவனாக இருந்த சேனாதி அண்மையில் சுடப்பட்டு, பின்னர் வைத்தியசாலையில் இறந்த காலகட்டத்தில் என்னுடன் தொலைபேசியில் கதைத்தபோது, அந்த இழப்பையிட்டு மனவருத்தப்பட்டே கதைத்திருந்தான். ஆனால் தன்னுடன் இருந்த ராஜன் என்பவன் வன்னிப்புலிகளின் கையாளாக மாறி தன்னைப்பற்றியும் தன்னுடன் இருந்த ஏனையோர் பற்றியும் வன்னிப் புலிகட்கு தகவல் கொடுத்து,தங்களை கொலை செய்ய சதிசெய்கிறான் என காஸ்ட்ரோ நினைத்திருக்கவில்லை. உண்ட உணவில் மயக்கமருந்து கொடுக்கப்பட்டு தூங்கிக்கொண்டிருந்த நிலையில் எந்த இயக்கத்திற்காக தனது வாழ்நாளில் அரைவாசி காலப்பகுதியை அர்பணித்தானோ அந்த இயக்கத்தினால் வஞ்சகமாகக் கொல்லப்பட்டான். 30வயதில் அவன் உயிர் பிரிந்தது. 15 வருடங்கள் புலிகட்காகப்போராடியதில் காஸ்ட்ரோ எதனையும் பெறவில்லை. கடைசியில் 'துரோகி 'என.ற பட்டத்துடன் புலிகளால் நயவஞ்சகமாகக் கொலை செய்யப்பட்டிருந்தான் தன் வாழ்நாளில் அரைவாசிப்பகுதியை தன் இன விடுதலைக்காய் அர்ப்பணம் செய்துபோராடிய காஸ்ட்ரோ வன்னிப்புலிகளால் நயவஞ்சகமாக கொல்லப்பட்ட ஒரு சுத்த வீரனே என்பதில் சந்தேகம் இல்லை.

## மட்டக்களப்புத் தமிழரின் இருண்ட எதிர்காலம்

கடந்த பொதுத்தேர்தலில் முன்னர் எப்போதும் இல்லாத வகையில் மடடக்களப்பில் இருந்த 4 தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழரசுக்கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இது மட்டக்களப்புத் தமிழரின் ஒற்றுமையை எடுத்துக்காட்டியிருந்தது. ஆனால் கருணா விவகாரத்தைத் தொடர்ந்து இன்று ஏற்பட்டுள்ள நிலைமை பல மட்டக்களப்பு சிந்தனையாளர்களையும் சஞ்சலம் அடையச் செய்துள்ளது. கிழக்கைப்பொறுத்த அளவில்,அம்பாறை மாவட்டத்தில் தமிழர் 3ம் இனமாகவே வாழ்கின்றனர். திருமலையில் தமிழர் 2ம் இடத்திலேயே உள்ளனர்.மட்டக்களப்பில் மாத்திரம்தான் தமிழர் பெரும்பான்மையினராக உள்ளனர்.இருப்பினும் தொடரும் இனப்போரின் போது, மட்டக்களப்புத்தமிழர் தமது சலுகைகளையும், உரிமைகளையும் படிப்படியாக இழந்து வந்தனர்.அங்கே ஏனைய சமூகங்களின் கை ஓங்கி வந்துள்ளது. யாழ்ப்பாண மேலாதிக்கம் எப்போதுமே இருந்துவந்துள்ள போதிலும் வடகிழக்கு இணைந்த ஒரு அமைப்பிலேயே தாங்கள் உரிமையுள்ளவர்களாக வாழமுடியும் என்பதை மட்டக்களப்புத்தமிழர்கள் அனைவருமே உணர்ந்துகொண்டுள்ளனர். இதனாலேயே பிரதேச வேறுபாடுகளை மறந்து மட்டக்களப்புத் தமிழர் யாழ்ப்பாணத்தலைமைத்துவத்தை கொண்ட கட்சிகளின் பின்னாலும், இயக்கங்களின் பின்னாலும் அணிதிரண்டனர். இன்றோ கருணாவிவகாரத்தின் பின்னர் மட்டக்களப்புத்தமிழரின் நம்பிக்கையில் சரிவு ஏற்பட்டுள்ளது.கருணாவின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட தலைமையில்புலிகள் ஒரு பலம்வாய்ந்த ஒரு ராணுவ அரசியல் சக்தியாக விளங்கினார்கள். மற்றொரு யுத்தம் ஏற்பட்டால்,புலிகளால் மட்டக்களப்பை கைப்பற்றிவிடமுடியும் என்றொரு நிலைமையே இருந்தத. நன்கு பயிற்றப்பட்ட புலிகளின் பல படையணிகள், நீண்டதூர ஏவகணை உள்ளிட்டஆயுத பலம் என்பன இருந்தன. இலங்கைப்படையினர் உண்மையில்இந்த நிலைமை கண்டு உள்ளூரபயமடைந்தே இருந்தனர். ஆனால் கருணாவிவகாரத்தால் இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. இன்று மீண்டும் யுத்தம் ஏற்படுமானால், மட்டக்களப்பில் உள்ள வன்னிப்புலிகள் மிக எளிதாகத் தோற்கடிக்கப்பட்டுவிடுவர். அரச ராணுவம் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மட்டுமல்ல திருமலையிலும் முழுக்கட்டுப்பாட்டைக் கொண்டுவரும் ஏதுநிலையே உள்ளது. கருணாவிவகாரம் உண்மையில் புலிகளின் உள்வீட்டுவிவகாரமே. வுன்னிப்புலிகள் கூறுவதுபோல், கருணா பணவிடயத்தில் ஒழுங்கீனங்கள் செய்திருக்கலாம். ஆனால் தங்கள் இயக்கத்தின் மிகப்பெரும்போர்களில் பெரும் பங்காற்றிய ஒருதளபதியின் இத்தவறுக்கு புலிகள் கொடுத்திருக்கக்கூடிய தண்டனை பற்றியே கருணா பயப்பட்டிருந்தார். புலிகளின் சரித்திரத்தில் பிரபாகரனை எதிர்த்த எவரும் உயிருடன் விட்டு வைக்கப்பட்டிருக்கவில்லை. புலிகளின் அகராதியில் மன்னிப்பு, உயிர்ப்பிச்சை என்ற வார்த்தைகட்கு இடம் இல்லை. புலிகள் இயக்கம் தமிழரின் எதிர்காலம்,உரிமை என்பவற்றை முன்னிறுத்தி இருந்திருக்குமெயானால், சகோதரப்படுகொலைகளைச் செய்யும் வெறிபிடித்த கொலை கலாச்சாரத்ததை எப்பொழுதோ விட்டிருந்திருக்கும். ஆனால் தமிழர் விடுதலைக்குப் பதிலாக, இன்று புலிகள் இயக்கம் முதன்மைப்படுத்தப்பட்டதால், அந்த இயக்கத்தின் தலைவரின் தன்மானம், இயக்கப்பெருமை என்பன முக்கியத்துவம் பெற்றுவிட்டன. மாத்தையாவுக்கு கிடைத்த மரண தண்டனை தனக்கும் கிடைக்கும் என கருணா பயந்ததினாலேயே, வன்னிப்புலிகளுக்கு எதிராக தனிவழிப்பிரகடனம் செய்யவேண்டிய நிலை அவுருக்கு ஏற்பட்டது. புலிகள் லாப நட்டம் பாா்பவர்கள் அல்ல. இந்தத்தீர்மானம் இன்ன விளைவை ஏற்படுத்தும் என எண்ணிப்பார்ப்பவர்கள் அல்ல. ராஜீவ் காந்தி கொலைவிவகாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அந்தப்படுகொலை எத்தகைய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நினைத்துப்பார்த்திருந்தனரா? அப்படியேதான் கருணாவிவகாரமும், எத்தகைய பாரதூர விளைவுகளை ஏற்படுத்தும் என எண்ணிப்பார்க்காமலே, கருணாவை ஒழித்துவிட வன்னித்தலைமை தீா்மானித்தது. அதனால் இன்று புலிகள், ஏறக்குறைய கிழக்கை இழந்துவிடும் நிலைமையே ஏற்பட்டுள்ளது. வன்னி அணியினர், கருணாஅணியினர் என மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பிரிந்துநின்று புலிகள் பரஸ்பர சகோதரப்படுகொலைகளில் ஈடுபடுவது, இந்த மாவட்டங்களில் உள்ள ஏனைய சமூகத்தவர்களின் கைகளை ஓங்கச்செய்துள்ளது. அந்தச்சமூகத்தினர் உள்ளூர மகிழ்ச்சியடைவதை மட்டக்களப்பு தமிழர் உணர்ந்துகொண்டு, தங்கள் எதிர்காலம் பற்றி அச்சம் கொள்ளத்தலைப்பட்டுள்ளனர். இது தேவைதானா?. ஏன் இந்தச்சகோதரப்படுகொலைகள் தவிர்க்கப்படக்கூடாது?.புலிகளின் தலைமை மாறவில்லை மாறவும் மாட்டாது என்றே தோன்றுகிறது. இதே வேளை, புலிகளைத்தட்டிக்கேட்க ஆலவட்டம் துர்க்கும் அவுஸ்த்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள கனவான்கட்கு துணிவு இல்லை. பஜோ நடத்தியும், பலகாரம் விற்றும், கோயில்களைக்கைப்பற்றி உண்டியல் பணத்தைக் கைவசப்படுத்தியும், புலிகட்கு நிதிசேகரிக்கும் வைத்திய கலாநிதிகளும், பொறியியலாளர்களும், கணக்காளர்களும், ஏனையோரும் புலிகளைத்தட்டிக்கேட்கத் திராணியற்றவர்கள். இந்தக்கனவான்கனின் வசை மொழிகளைத் தாங்கிக்கொண்டு பேனாமுனையில் புலிகளை கண்டிக்கும் என்போன்றோரின் எழுத்துக்கள் புலிகளைத் திருத்தப்போவதில்லை. இறுதியில் மட்டகளப்புத்தமிழரின் எதிர்காலம் மட்டுமல்ல யாழ்ப்பாணத்தமிழரின் எதிர்காலமும் புலிகளின் நடவடிக்கைகளால் இருண்டு போய்விடும் என்றே தோன்றுகிறது.